தினத்தந்தி
13-3-2020



சுங்க இலாகா–எஸ்.ஆர்.எம். அணிகள் மோதிய ஆட்டத்தில் விறுவிறுப்பான ஒரு காட்சி.

**‘ஏ’ டிவிசன் கைப்பந்து லீக்:**

# வருமான வரி அணி தோல்வி

சென்னை, மார்ச்.13–

சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில், டாக்டர் ரெலா இன்ஸ்டிடியூட் மற்றும் மருத்துவ மையம், ஆச்சி மசாலா நிறுவனம் ஆகியவை ஆதரவுடன் ‘ஏ’ டிவிசன் கைப்பந்து லீக் போட்டி அரும்பாக்கத்தில் உள்ள டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி மைதானத்தில் நடந்து வருகிறது. இதில் 5–வது நாளான நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் சுங்க இலாகா அணி 25–15, 25–19, 25–22 என்ற நேர்செட்டில் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக அணியை வீழ்த்தியது. மற்றொரு ஆட்டத்தில் செயின்ட் ஜோசப்ஸ் என்ஜினீயரிங் கல்லூரி அணி 14–25, 15–25, 25–20, 25–15, 15–7 என்ற செட் கணக்கில் வருமான வரி அணியை போராடி சாய்த்தது. இன்று நடைபெறும் ஆட்டங்களில் எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம்–ஐ.சி.எப். (மாலை 4.30 மணி), இந்தியன் ஓவர்சீஸ் வங்கி–தமிழ்நாடு போலீஸ் (மாலை 6 மணி) அணிகள் சந்திக்கின்றன.

140320